8th August 1966]

was sanctioned to the Society by the Government besides free services of staff of one Gazetted Officer, one Junior Analytical Chemist and one Manager-Accountant. The equipments required for the refinery have been purchased and installed.

**திரு. வை. சங்கரன் :** அவர்களிடமிருந்து 14 காரட் தங்கம் கிடைக்குமா ? அப்படியானுல் எப்படிப்பட்டவர்களுக்கு அந்தத் தங்கம் வழங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பழைய நகைகளை வாங்கி அதை முழுத் தங்கமாக மாற்றிப் பின்னுல் 14 காரட் தங்கமாக மாற்றுவது. அதுதான் அந்த கோல்ட் ரிபைனரியில் கவனிக்கப்படுவது.

பொற்கொல்லர்கள்

* 194 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பொற்கொல்லர்களுக்குத் தொழில் செய்வதற்காகக் கடன் வழங்கப்பட்டுள்ளவர்களில், முதலில் குறிப்பிட்ட தொழிலை மாற்றிக் கொள்வதற்கு எத்தனை பேர் மனுச் செய்திருக்கிறார்கள், மாவட்ட வாரியாக?

(இ) அவைகளின் மீது எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கை யாது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) & (இ) A statement[a] is placed on the Table of the House.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** பொற்கொல்லர்கள் ஒரு தொழிலுக்குக் கடன் பெற்று அதை வேறு வணிகத்திற்கு மாற்றவேண்டிய நிலைமை ஏற்பட்டால், அவர்கள் பெற்ற கடனைத் திரும்பக் கொடுத்து, பின்னுல் மனுச் செய்து அதற்குப் பிறகு மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது என்று தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படியானுல் அந்தக் கடனைத் திரும்பப் பெறுவது இல்லாமலேயே வேறு ஒரு தொழிலுக்கு மாற்றுவதற்கு வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** திரும்பச் செலுத்தாமலேயே வேறு தொழிலுக்கு மாற்றுவதற்கு அனுமதிக்கும் விஷயம் ஆராயப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.

பட்டாபிராமன் கமிட்டி அறிக்கை

* 195 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) Employees' State Insurance Scheme பற்றிய பட்டாபிராமன் கமிட்டியின் அறிக்கை அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டுவிட்டதா ?

(இ) ஆமெனின், அதன் நகல் ஒன்று சபை முன் வைக்கப் படுமா ?

[a] Printed as Appendix I on pages 867-875.